# முதல்வர் மு.க.ஸ்டாலின் தென்காசி மாவட்டத்தில் பங்கேற்ற அரசு நிகழ்ச்சிகள்!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் உள்ள அமர் சேவா சங்கத்திற்கு நேரில் சென்று பார்வையிட்ட போது, அங்கு செயல்பட்டு வரும் சாரதாம்பாள் ITI கல்வி நிறுவனத்தில் பயின்று தேசிய அளவில் DTP பாடப் பிரிவில் முதலிடம் பெற்ற வி. மணிகண்டன், தையல் பாடப் பிரிவில் மாநில அளவில் முதலிடம் பெற்ற திராவிட செல்வி, கம்ப்யூட்டர் COPA பாடப் பிரிவில் மாநில அளவில் முதலிடம் பெற்ற எம். வசந்தி ஆகியோர் முதலமைச்சர் அவர்களை சந்தித்து வாழ்த்துப் பெற்றனர். உடன் அமர் சேவா சங்கத்தின் நிறுவனர் எஸ். ராமகிருஷ்ணன் மற்றும் கவுரவ செயலாளர் எஸ். சங்கர ராமன் ஆகியோர் உள்ளனர்.



தென்காசி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொண்டுவிட்டு நேற்று முன்தினம் (29.10.2025) குற்றாலம் சுற்றுலா மாளிகையிலிருந்து மதுரைக்கு புறப்பட்ட முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை பெருந்திரளான பொதுமக்கள் உற்சாகமாக வழியனுப்பி வைத்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் உள்ள அமர் சேவா சங்கத்திற்கு நேரில் சென்று, பார்வையிட்டு, அங்கு தங்கியுள்ள மாற்றுத்திறனாளிகளுடன் கலந்துரையாடினார்.



தென்காசி மாவட்ட அரசு விழாவில் கலந்து கொள்வதற்காக நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசி மாவட்டத்திற்கு வருகை தந்த முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள், 25.9.2025 அன்று சென்னையில் நடைபெற்ற கல்வியில் சிறந்த தமிழ்நாடு நிகழ்ச்சியில், ஒழுகும் வீட்டில் தனது அப்பா வசித்து வருதாக கண்ணீர் மல்க பேசிய மாணவி பிரேமா அவர்களுக்கு வீடு வழங்க உத்தரவிட்டு, அதன்படி கலைஞரின் கனவு இல்லம் திட்டத்தின்கீழ் கீழப்பாவூர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட கர்குளத்தில் கட்டப்பட்டு வரும் அவ்வீட்டின் கட்டுமானப்பணிகளை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்து செல்வி பிரேமாவின் பெற்றோர் ராமசாமி, திருமதி எம். முத்துலெட்சுமி ஆகியோரை சந்தித்தார்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள கண்காட்சி அரங்குகளை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ். ஆர்.ராமச்சந்திரன், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் நடைபெற்ற அரசு விழாவில், மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்புச் சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை வழங்கி, அவர்களுடன் உரையாடினார். இந்நிகழ்வின்போது, அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், ஆகியோர் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (29.10.2025) தென்காசியில் உள்ள அமர் சேவா சங்கத்திற்கு நேரில் சென்று, அமர் சேவா சங்கத்தின் நிறுவனர் எஸ். ராமகிருஷ்ணன் மற்றும் கவுரவ செயலாளர் எஸ். சங்கர ராமன் ஆகியோரை சந்தித்து பேசினார். உடன் தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் ஏ.கே.கமல் கிஷோர், உள்ளார்.